செ.வெ.எண்.316/2009, நாள்:23.09.2009

# பத்திரிக்கை செய்தி

2008-09ம் ஆண்டு தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தில் மீன்வளத்துறையின் மூலம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள மீன்வளர்ப்பில் ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த மூன்று பயனாளிகளுக்கு மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணைகள் அமைப்பதற்கு 50 சதவீதம் மானியம் இவ்வாண்டு (2009-10) வழங்கப்படவுள்ளது. இம்மானியம் காஞ்சிபுரம் மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையில் உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். ஜனவரி 2009க்கு பின் அமைக்கப்படும் மீன்பண்ணைகளுக்கு மட்டுமே இம்மான்யம் வழங்கப்படும். மேலும், இம்மானியம் பெறுவதற்கு கீழ்க்கண்ட தகுதி உடையவர்கள் உரிய படிவத்தில் விண்ணப்பம் சமர்ப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**மீன்குஞ்சு வளர்ப்பு மையம் (Fish Seed Rearing Center) தகுதிகள் :** வருடத்திற்கு 5 இலட்சம் மீன்குஞ்சுகள் (Advanced fingerlings) உற்பத்தி செய்ய தேவையான இடவசதி குறைந்தது ஒரு எக்டர், போதுமான தண்ணீர் வசதி மற்றும் மின்சார வசதி உள்ளவர்கள்.

பண்ணை அமைக்க விருப்பம் உள்ளவர்கள் மீன்துறை உதவி இயக்குநர் (நீர்வாழ் உயிரின வளர்ப்பு) 99, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, என்.ஜீ.ஒ.நகர், பொன்னேரி – 601 204, தொலைபேசி எண்.044-27971262 என்ற முகவரியில் அலுவலக நாட்களில் நேரில் தொடர்பு கொண்டு உரிய விண்ணப்ப படிவம் பெற்று தேவையான விவரங்கள் பூர்த்தி செய்து சமர்ப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், மீன்வளர்ப்பில் ஈடுபட்டுள்ள மீன்வளர்ப்போர்களுக்கு பிற மாநிலங்களில் உள்ள மீன்வளர்ப்பு பண்ணைகளுக்கு அழைத்து சென்று களபயிற்சியும், இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வருகின்றது. எனவே, விருப்பமுள்ள மீன்குஞ்சு வளர்ப்பவர்கள் மீன்துறை அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்